ELECTION COMMISSION OF SRI LANKA

# ANNUAL RESEARCH SYMPOSIUM 2019

*Striving for A Nation that Safeguards Universal Franchise*

## PROCEEDINGS

21st September 2019

# இலங்கையில் சமூக-சூழலியல் சீர்கேடுகளை ஏற்படுத்தும் தேர்தல் நடவடிக்கைகளை இனங்காண்பதும் சூழல் நேயமுள்ள தேர்தலின் அவசியமும்

கலாநிதி பரீனா ருசெயிக்[1], ஜசீரா காசிம்[2]

பிரதானமாக தேர்தலுக்கு முன்னரான நடவடிக்கைகளே தேர்தலின் பின்னரான செயற்பாடுகளைத் தீர்மானிப்பதாக அமைகின்றன. எனவே, பொறுப்பற்ற வேட்பாளர்களைத் தேர்தல் களத்தில் அமர்த்துவதன் விளைவால், நாட்டின் சுற்றுச் சூழல் வளமும், பொருளாதார வளர்ச்சியும், சுபீட்சமும் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்திச் சவால்களுக்கும், சூழலியல் சீர்கேடுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்படும். இதன் காரணமாக உலகில் தற்போது சூழல் நேயமுள்ள தேர்தலின் தேவையும் அவசியமும் உணர்த்தப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் எழில் மிக்க நாட்டை வழிநடாத்திச் செல்லும் தலைவர்களையே இத் தேர்தல்கள் தெரிவு செய்கின்றன. எமது நாட்டில் தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் கட்சி ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பாரிய சமூக சூழலியல் பாதிப்புக்களையும் வீண்விரயத்தினையும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக இவ்வாய்வின், பிரதான நோக்கமாக "சமூக சூழலியல் சீர்கேடுகளை ஏற்படுத்தும் தேர்தல் கால நடவடிக்கைகளை இனங்காண்பதனூடாக, சூழல் நேயமுள்ள தேர்தல் முறைகளைத் திட்டமிடுதல், இந்நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளையும் செயற்றிட்டங்களையும் முன்வைத்தல்" எனும் பிரதான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் கொண்டதாக எழுமாறாக மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு, மக்களிடையே வினாக் கொத்துக்கள் மற்றும் நேரடி கலந்துரையாடல்கள் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் SPSS மற்றும் MS Excel ஆகிய கணினி மென்பொதிகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் சில முக்கிய முடிவுகளாகக் கட்சி சார்பானவர்களால் மக்கள் ஏமாற்றப்பட்டு உளவியல் பாதிப்புக்களுக்குட்படுவோர் 83 வீதமாகவும், அமைதியின்மை, உறவுகளுக்கிடையில் விரிசல் ஏற்படுகின்ற நிலைமையில் 50 வீதமானோரும், தேர்தல் காலங்களில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஏற்படும் பாதிப்பை 37 வீதத்தினாலும், மது போதைக்கு அடிமையாகும் இளைஞர்கள் 42 வீதமாகவும், மற்றும் தேர்தல் காலங்களில் சூழல் சீர்கேடுகள் தொடர்பாக பொதுமக்கள் முழுமையாக (100 வீதம்) எதிர்ப்புக் கருத்தினைத் தெரிவித்ததோடு, ஆரோக்கியமான சூழல் நேயமுள்ள தேர்தல் முறைமையின் அவசியத்தையும் வலியுறுத்தினர். அதிகரித்த சத்தத்திலான ஒலிபெருக்கிப் பாவனை, போக்குவரத்து நெரிசல், பட்டாசு மற்றும் வெடி பொருட்களின் பாவனை, துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் பொலித்தின்களாலான அலங்கரிப்பு மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் சிதறல் போன்றவைகள் சூழலை மோசமாகப் பாதிக்கக் காரணமாகின்றன. தேசிய மட்டத்தில், அனைத்து தேர்தல்களும் முறையாக, குறைந்த செலவில், வினைத்திறனான தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவுசெய்து, நாட்டின் சமூகப் பொருளாதார மற்றும் சூழல் நடவடிக்கைகளுக்கு பங்கம் ஏற்படா விதத்தில் இடம்பெறும் தேர்தல் செயன்முறைகளே பொதுமக்களால் விரும்பப்படும் தேர்தல் நடவடிக்கைகளாக உள்ளன.

திறவுச் சொற்கள் : சூழல் நேயமுள்ள தேர்தல், சூழல் சீர்கேடுகள், சமூகச் சீர்கேடுகள், தேர்தல் பிரச்சாரம், தகுதியான வேட்பாளர்கள்.

[1]சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியல் துறை கொழும்பு பல்கலைக்கழகம்

[2]உதவி விரிவுரையாளர், புவியியல் துறை கொழும்பு பல்கலைக்கழகம்